## 594 வது கடற்கரை கவியரங்கு!



நாள் 04-10-2020



# வாழ்க்கை மகத்துவமானது!

அன்பும் அறனும் நிறைந்த மனத்துக்கு வாழ்க்கை மகத்துவமானது!
அன்பால் உயிர்களை அனைப்பார் தமக்கும் வாழ்க்கை மகத்துவமானது!
தன்னலமின்றி அறிவைச் செய்திடில் வாழ்க்கை மகத்துவமானது!
மன்னிய மரபைக் காத்து வாழ்ந்திடில் வாழ்க்கை மகத்துவமானது!

தன்னலம் கொண்ட மாந்தர் வழியில் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
உண்மையறியா அவல நெஞ்சில் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
தண்மையில்லா மனத்தின் அறிவில் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கிடில் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!

தன்னலச் சார்பில் அறிவைச் செய்தால் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
பொன்னைக் குவிக்கும் புதுவழி தேடிட வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
போலிமுகங்களின் பொய்வழிச் சென்றால் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
பாலை நிலத்தில் வேர்விடும் செடிக்கு வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!

புலியை நினைத்து பூனை வாழ்ந்தால் வாழ்க்கை எங்ஙனம் மகத்துவமாகும்!
காலைச் சுற்றிய பாம்பு கடிக்காவிடில்தான் வாழ்க்கை மகத்துவமாகும்!
எலிவளையாயினும் தனிவளையாயின் வாழ்க்கை மகத்துவமாகும்!
ஆறுமுகமாயினும் நூறுமுகமாயினும் அறிவுடை வாழ்க்கையே மகத்துவமாகும்!

கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்
(08-09-2020) 9.40.PM



